வேளாண் பொறியியல் கூட்டுறவு இணையத்தில் சென்று அந்த விவசாயிகள் தங்களுக்கு வேண்டிய அளவு, எந்த ரகத் தார்ப் பாய்கள் வேண்டுமென்று அவர்களே தேர்வு செய்து கொள்ளலாம். அப்படி அவர்கள் தேர்வு செய்யக்கூடிய அந்தத் தார்ப்பாய்க்கு 50 சதவீத மானியத்தை அரசு வழங்கும். அது அதிகபட்ச மாக 1,000 ரூபாய் மானியம் என்று நிர்ணயம் செய்திருக் கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 494, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், இருக்கையில் இல்லை.

வினா எண் 495, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

495—

போளூர் சத்துணவு மையங்களுக்கு புதியக் கட்டிடங்கள்.

*11750—திரு. தா. வேடியப்பன் :

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

போளூரில் உள்ள புரட்சித்தலைவர் சத்துணவு மையங் களுக்கு புதியதாக கட்டிடங்கள் கட்டித்தர அரசு முன் வருமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி, சமூகநலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதிய கட்டிடங்கள் கட்டித்தர அரசு முன்வரும்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலுக்கு நன்றியைக் கூறிக் கொள்கிறேன். அதே நேரத்தில் போளூரைப் பொறுத்தவரை யில் 10 சத்துணவு மையங்கள் இருக்கின்றன. 10 சத்துணவு மையங்களுக்கும் ஒரு கட்டிடம் கூடக் கிடையாது. ஆகவே, போளூர் தேர்வுநிலை பேரூராட்சியில் உள்ள சத்துணவு மையங்களுக்கு கட்டிடங்கள் கட்டித்தர அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூரில் 10 சத்துணவு மையங்கள் இல்லை. 72 சத்துணவு மையங்கள் இருக்கின்றன.

1993 ஏப்ரல் 27]

இதில் 54-க்குக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, அவற்றில் சத்துணவு மையங்கள் செயல்படுகின்றன. மீதமுள்ள 18 சத்துணவு மையங்களில், 1992—93-ஆம் நிதியாண்டில் 4 சத்துணவு மையங்களுக்கு கட்டிடங்கள் கட்டப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வருகிற நிதியாண்டில் எஞ்சியுள்ள 14 சத்துணவு மையங்களுக்கும் கட்டிடங்கள் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் நகரத்தைப் பொறுத்தவரையில் இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறேன். ஒன்றியத்தைப் பொறுத்த வரையில் 73 சத்துணவு மையங்கள் என்பது அறிந்த விஷயம். போளூர் டவுனைப் பொறுத்தவரையில் 10 சத்துணவு மையங்கள் இருக்கின்றன. அந்த 10 சத்துணவு மையங்களுக்குமே, ஒன்றுக்குக்கூட கட்டிட வசதியில்லை. அதனால், போளூர் தேர்வுநிலை பேரூராட்சியில் இருக்கக்கூடிய சத்துணவு மையங் களுக்குக் கட்டிடம் கட்டித்தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டு இருக்கிறேன். அதற்கு நடப்பு நிதியாண்டில் ஆவன செய்வாரா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் தொகுதியிலே எஞ்சியுள்ள 14 சத்துணவு மையக் கட்டிடங்களும் வருகிற நிதியாண்டில் முழுமையாக பரிசிலிக்கப்பட்டு கட்டிடம் கட்டித்தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 496, திரு. கே. பி. ராஜு, மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்.

496—

கோயம்புத்தூர் சிறுவர் சிறைச்சாலையை புதுப்பித்தல்

*14882—திரு. கே. பி. ராஜு :

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூரில் உள்ள சிறுவர் சிறைச்சாலையை புதுப் பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?